ITFL/SEC/2025-26/OCT/02 **6th October 2025**

BSE Limited	**National Stock Exchange of India Limited**
Phiroze Jeejeebhoy Towers,	Exchange Plaza, 5th Floor, Plot No. C/1,
Dalal Street,	G Block, Bandra-Kurla Complex,
Mumbai – 400 001	Bandra (East), Mumbai- 400 051
Scrip Code – 533329	**NSE Symbol: INDTERRAIN**

Dear Sir/Madam,

Sub.: Newspaper advertisement for Special Window for re-lodgment of transfer requests of physical shares – Reg.

Ref.: (1) SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97 dated 2nd July 2025 ("SEBI Circular")

(2) Our earlier intimation vide ITFL/SEC/2025-26/AUG/01 dated 4th August 2025

As per the captioned subject and reference and pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed newspaper advertisements, regarding facilitation to eligible shareholders for re-lodgement of transfer requests of physical shares, published in Business Standard (English) and Tamil Murasu (Tamil) on 6th October 2025. The advertisement is also available on the website of company viz https://www.indianterrain.com/pages/investor-information

This is for your information and records. Kindly acknowledge the receipt of the same.

Thanking you,

Yours faithfully,
For Indian Terrain Fashions Limited

SAINATH SUNDARAM
Digitally signed by SAINATH SUNDARAM
Date: 2025.10.06 16:05:14 +05'30'

Sainath Sundaram
Company Secretary & Compliance Officer

BirlaNu Limited

(Formerly known as HIL Limited)
CIN: L74999TG1955PLC000656
Registered Office: Office No. 1 & 2, L7 Floor, SLN Terminus, Survey No. 133, Beside Botanical Garden, Gachibowli, Telangana, Hyderabad -500032
Ph. No.: +91 40 68249000 | cs@birlanu.com | https://birlanu.com/

SPECIAL WINDOW FOR RE-LODGEMENT OF TRANSFER REQUESTS OF PHYSICAL SHARES

Notice is hereby given to the Shareholders of BirlaNu Limited that in terms of SEBI Circular No. SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97 dated July 2, 2025, a Special Window has been opened from July 7, 2025 to January 6, 2026, for re-lodgement of transfer requests that were lodged prior to April 1, 2019, but were rejected/returned/not attended to due to deficiency in the documents/process/or otherwise.

All such transfer requests duly rectified and re-lodged on or before January 6, 2026 will be processed through the transfer-cum-demat mode, i.e., the shares will be issued only in dematerialised form after transfer. The lodger(s) must have a demat account and provide the Client Master List (CML) along with the transfer documents, share certificate(s) and other necessary document(s) while lodging the documents for transfer with our RTA.

Eligible shareholders are requested to submit their transfer requests to the Company's Registrar and Share Transfer Agent (RTA), i.e., Venture Capital and Corporate Investments Private Limited, "AURUM", 4th & 5th Floor, Plot No.57, Jayabheri Enclave Phase-II, Gachibowli, Hyderabad – 500032, Phone: +91-40-23818475/76 Email: investor.relations@vccipl.com or contact the Company at cs@birlanu.com for further assistance.

For **BirlaNu Limited**
Sd/-
Nidhi Bisaria
Company Secretary & Compliance Officer

Place: New Delhi
Date: October 3, 2025

सेन्ट बैंक होम फायनेन्स लिमिटेड
Cent Bank Home Finance Limited

सेन्ट्रल बैंक ऑफ इण्डिया की अनुषंगी   Subsidiary of Central Bank of India

REQUEST FOR PROPOSAL (RFP)

Phone: 022-69519315 / Email id: pankaj.kumar@cbhfl.com

Cent Bank Home Finance Limited invites sealed proposals from experienced software companies Collection & Recovery Software Solution companies for the purpose implementation & maintenance support of Cloud-base/ On prem (Subscription/Perpetual) Software Solution for CBHFL.

Details and RFP documents can be obtained from our **website www.cbhfl.com**. Last date of the submission of proposal is **20th October 2025 by 5pm.**

Further addendum and corrigendum, if any, will be published only on the CBHFL **website www.cbhfl.com** and not in newspapers.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

TENDER NOTICE

Bank of Baroda, Information Security Department, Mumbai invites bids for Selection of Service Provider for External Attack Surface Management (EASM) & Digital Risk Monitoring (DRM) Services through GeM portal.

Details are available under Tenders Section of Bank's website **www.bankofbaroda.bank.in**

Any Addendum/Corrigendum including modification in the bid shall be notified only on Bank's official website. Bidders should refer the same before submission of their Bids.

GeM Bid Reference No.: GEM/2025/B/6743971

Last date of submission of online bids: **28-Oct-2025 up to 15:00 hrs. IST**

Place: **Mumbai**
Date : **06.10.2025**

Group Chief Information Security Officer

93/25-26

KAMLESH N SHETH holding 100 shares of SIKA Interplant Systems Limited Registered Office; No. 03, Gangadharchetty Road, Dr. Sharma Building, Bangalore - 560042, in Folio No. K000076 bearing Share Certificate Number 1289 with distinctive numbers from 469601 - 469700 consisting of 100 shares of Rs. 10/- each.

I do hereby give notice that the said Share Certificate is lost and I have applied to the Company for issue of duplicate Share Certificate.

The public is hereby warned against purchasing or dealing in anyway with the said Share Certificates. The company may issue duplicate Share Certificates if no objection is received by the company, **within 15 days** of the publication of this advertisement, after which no claim will be entertained by the company in that behalf.

Place: Trichy
Date : 06.10.2025

KAMLESH N SHETH
Folio No : K000076

STATE BANK OF INDIA

Local Head Office, Tilak Marg, Jaipur -302005

EMPANELMENT OF FIRE SAFETY AUDITORS/ FIRE CONSULTING FIRMS

State Bank of India, Local Head Office, Jaipur intends to prepare a panel of qualified Fire Auditors / Fire Consulting Firms for carrying out Fire Safety Audit of the Branches located in the State of Rajasthan. Interested parties may download the application form & detailed information from the Bank's Website https://sbi.bank.in under Empanelment of vendors. Application duly filled in all respects should be submitted **up to 3.00 PM on or before 27 October 2025** in the office of undersigned. The Bank will not be responsible for late receipt due to postal delay or any other reason(s). The Bank reserves the right to accept or reject any or all the application(s) received at any stage without assigning any reason(s) whatsoever.

Date: 06 October, 2025
Place : Jaipur   **Assistant General Manager (Premises & Estate)**

LUX INDUSTRIES LIMITED

CIN : L17309WB1995PLC073053
Registered Office: 39, Kali Krishna Tagore Street, Kolkata - 700 007
Tel No.: +91-33-4040 2121
E-mail: investors@luxinnerwear.com,
Website: www.luxinnerwear.com

NOTICE TO SHAREHOLDERS REGARDING ONGOING 100 DAYS CAMPAIGN-SAKSHAM NIVESHAK

Notice is hereby given that the Investor's Education and Protection Fund Authority ("IEPFA"), Ministry of Corporate Affairs ("MCA") via letter dated July 16, 2025 has initiated a 100 days Campaign - "Saksham Niveshak". The Company through its various communications continues to encourage shareholders to claim their unpaid or unclaimed dividends by updating their KYC and other details updates.

It's important for shareholders to update PAN; Nomination details, Contact info [postal address, mobile number etc.], Bank account details, Specimen signature and other details. The physical shareholders are requested to complete their KYC and other updates by downloading the necessary KYC update forms from Company's website at **luxinnerwear.com/download-forms** or from RTA website at **https://ris.kfintech.com/clientservices/isc/isrforms.aspx** and to submit the duly filled and signed form along with KYC documents to Registrar and Share Transfer Agent ("RTA"), M/s Kfin Technologies Limited at Selenium, Tower B, Plot 31-32, Gachibowli, Financial District, Nanakrameguda, Serillingampally, Hyderabad-500032, Telangana, Email : **einward.ris@kfintech.com** or to the Company at E-mail : **investors@luxinnerwear.com** . Shareholders holding shares in electronic form and have not claimed their dividend, can claim the same by updating/modifying their details with their respective Depository Participants [DPs].

To ensure you receive your rightful entitlements, we request you to submit your documents on or before **November 6, 2025**.

For any assistance regarding 100 days Campaign "Saksham Niveshak", please do reach out to us at Email id: **investors@luxinnerwear.com** / Phone No. (033) 40402121 or to the RTA- M/s Kfin Technologies Limited, (Unit: Lux Industries Limited) at Selenium, Tower B, Plot 31-32, Gachibowli, Financial District, Nanakrameguda, Serillingampally, Hyderabad-500032, Telangana at Email: **einward.ris@kfintech.com**/ Toll Free No : 18003094001.

For Lux Industries Limited
Sd/-
Smita Mishra
Company Secretary & Compliance Officer
M. No.: A26489

Date : 6th October, 2025
Place : Kolkata

INDIAN TERRAIN FASHIONS LIMITED

Registered office and Address for communication: Survey No. 549/2 & 232, Plot No 4 Thirukkachiyur & Sengundram Industrial Area, Singaperumal Koil Post, Chengalpattu – 603204, Tamil Nadu.
Email ID: response.itfl@indianterrain.com, Ph: 044 – 4227 9100 Website: www.indianterrain.com
CIN: L18101TN2009PLC073017

SPECIAL WINDOW FOR RE-LODGEMENT OF TRANSFER REQUESTS OF PHYSICAL SHARES

SEBI through its Circular No. SEBI/HO/MIRSD-PoD/P/CIR/2025/97 dated 2nd July 2025, has decided to open a Special Window only for re-lodgement of transfer requests of physical shares, for a period of Six Months from 7th July 2025 till 6th January 2026 ("Re-lodgement Window"). In this regard, we already had published Newspaper Ad on 1st August 2025.

This facility is available for Transfer Deeds lodged prior to 1st April 2019 and which were rejected / returned / not attended due to deficiency in the documents / process / or otherwise. Please note that the shares for the said requests will be issued only is dematerialized (demat) form upon successful processing of the requests during the Re-lodgement Window period.

The Company and its Registrar and Transfer Agent ("RTA") has a dedicated team to facilitate processing of the transfer of shares during the aforesaid Re-lodgement Window period.

Investors who have missed the earlier deadline of 31st March 2021 are encouraged to take advantage of this opportunity by furnishing the necessary documents to the Company and its RTA at the below given details:

Particulars	Coordinators
Indian Terrain Fashions Limited	**E-mail:** secretarial@indianterrain.com **Tel No:** 044 – 4227 9100 **Regd. Address:** Survey No. 549/2 & 232, Plot No 4 Thirukkachiyur & Sengundram Industrial Area, Singaperumal Koil Post, Chengalpattu – 603204, Tamil Nadu.
MUFG Intime India Private Limited (previously known as Link Intime India Private Limited)	You may raise service request through: https://web.in.mpms.mufg.com/helpdesk/Service_Request.html **Tel No:** +91-8108116767 (Toll-Free number: 1800 1020 878) **Address:** C 101, Embassy 247, L.B,S.Marg, Vikhroli (West), Mumbai – 400083, Maharashtra.

For **INDIAN TERRAIN FASHIONS LIMITED**
sd/-
Sainath Sundaram
Company Secretary & Compliance Officer

Date: 6th October 2025
Place: Chennai

UNITY SMALL FINANCE BANK LIMITED

Corporate Office: Centrum House, Vidyanagari Marg, Kalina, Santacruz (E) Mumbai - 400 098.

PUBLIC NOTICE FOR SALE OF SECURED IMMOVABLE PROPERTY BY WAY OF E-AUCTION SALE

APPENDIX IV-A [See proviso to 8(6)]

SALE NOTICE FOR SALE OF IMMOVABLE PROPERTIES

E-Auction Sale Notice for Sale of Immovable Assets under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with proviso to Rule 8(6) of the Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to the public in general and in particular to **(i) Ravijyot Finance and Leasing Private Limited ("RFLPL"/ the "Mortgagor"), (ii) Housing Development and Infrastructure Limited ("HDIL"/ the "Borrower"), (iii) Mr. Rakesh Kumar Kuldeep Singh Wadhawan; and (iv) Mr. Sarang Rakesh Wadhawan,** that below-described immovable property, which has been mortgaged/charged to Unity Small Finance Bank Limited (the **"Bank"**), the constructive possession of which has been taken over by the Authorised Officer of the Bank on December 26, 2023, will be sold on **"As is where is", "As is what is", "Whatever there is" and "No Recourse" basis, on November, 3, 2025,** for recovery of **INR 2059,30,48,062.30 (Rupees Two Thousand Fifty Nine Crores Thirty Lakhs Forty Eight Thousand Sixty Two and Thirty Paise)** due to the Bank from HDIL and RFLPL and the guarantors. The reserve price will be **INR 1234.62 Crores** and the earnest money deposit will be **INR 15 Crores.**

Brief Description of the Immovable Property:

All those pieces and Parcels of land situated at Survey No. 344 (Part), C.T.S No.1, Village Dahisar, Taluka Borivali, Mumbai Suburban District, Maharashtra admeasuring 429 Acres having corresponding extents and within boundaries as follows:-

North: Jafri Creek   South: Boundary of Eksar
East: River of Dahisar   West: Narrow Road Creek and Boundary

For detailed terms and conditions of the sale, please refer to the link provided in the Bank's website- **www.theunitybank.com**

Sd/-
Authorised Officer
Unity Small Finance Bank Limited

Date : 06.10.2025
Place : Mumbai

THE KARUR VYSYA BANK LIMITED

Karur Vysya Bank — Smart way to bank
Regd. & Central Office, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur - 639002
[CIN No: L65110TN1916PLC001295]
[E-mail:kvb_sig@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441]

Special Window for Re-lodgement of Transfer Requests of Physical Shares of Karur Vysya Bank Limited

Notice to Investors is hereby given that, pursuant to SEBI Circular No. SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97 dated July 02, 2025, a Special Window has been opened for a period of six months, from July 07, 2025, to January 06, 2026, to facilitate re-lodgment of transfer requests of physical shares. This facility is available for transfer deeds lodged prior to April 01, 2019, which were rejected, returned, due to deficiencies in documents. The shares re-lodged for transfer will be processed only in dematerialized form during this window period.

Investors who have missed the earlier deadline of March 31, 2021, are requested to furnish the necessary signed documents to the Bank's RTA as given below:

M/s. MUFG Intime India Private Limited,
(Unit: The Karur Vysya Bank Limited)
"Surya" 35 Mayflower Avenue, Behind Senthil Nagar,
Sowripalayam Road, Coimbatore-641028, Tamil Nadu.
E-mail: coimbatore@in.mpms.mufg.com
Website: www.in.mpms.mufg.com
Tel: 0422- 2314792/4958995/2539835/2539836

Kindly note that the shares that are re-lodged for transfer shall be issued only in demat mode after completing the due process.

For **The Karur Vysya Bank Limited**
Srinivasa Rao M
Company Secretary
(Membership No. ACS 19189)

Place : Karur
Date : October 04, 2025

தம்பதியிடம் ரூ.10 லட்சம் பறிப்பு பாஜ நிர்வாகி உள்பட 3 பேர் கைது

கோவையில் பரபரப்பு

கைதான ராஜராஜசாமி, ராசுகுட்டி, கோகுல கண்ணன்

கோவை, அக். 6– பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை பெயரில் தம்பதியிடம் ரூ.10 லட்சம் பறித்த பாஜ மாவட்ட செயலாளர் உள்பட 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

கோவை மாவட்டம் அன்னூர் அருகே உள்ள குமாரபாளையம் பகுதியை சேர்ந்த நாகராஜ் மற்றும் நாகமணி தம்பதியின் மூத்த மகன் திருமூர்த்தி என்பவர் கடந்த 2023ம் ஆண்டு நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தார். இது தொடர்பான வழக்கு கோவை கோர்ட்டில் நடந்து வந்த நிலையில் ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க கோர்ட் கடந்த மே மாதம் உத்தரவிட்டது. ஜூன் மாதம் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது. இவ்வழக்கை நடத்த உதவி செய்வதாக அறிமுகமான பாஜ மாவட்ட செயலாளர் சாமிநாதன் (எ) ராஜராஜசாமி(52), கோகுல கண்ணன், ராசுகுட்டி ஆகிய 3 பேர் இழப்பீடு தொகை கிடைக்க நாங்கள் தான் காரணம் என்றும், எங்களது குழுவினர் தான் அனைத்து வேலைகளையும் செய்து கொடுத்ததாக கூறி இதற்காக ரூ.10 லட்சம் தரவேண்டும் என மிரட்டி உள்ளனர். வேறு வழியின்றி நாகராஜ்-நாகமணி தம்பதியினர் ரூ.10 லட்சத்தை கடந்த ஜூன் மாதம் அவர்களுக்கு கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் தம்பதியை தொடர்பு கொண்ட 3 பேரும் மேலும் ரூ.10 லட்சம் தரவேண்டும் எனவும், அதுவும் கட்சி நிதியாக அண்ணாமலைக்கு வழங்க வேண்டும் என மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து தம்பதியின் மற்றொரு மகன் அருணாச்சலம் என்பவர் வீடியோ வெளியிட்ட நிலையில், இது குறித்து பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை அன்னூர் காவல் நிலையத்தில் தனது செயலாளர் மூலம் புகார் அளித்தார்.

இதன் பேரில் விசாரணை நடத்திய போலீசார் தம்பதியிடம் அண்ணாமலை பெயரை பயன்படுத்தி ரூ.10 லட்சம் மோசடியில் ஈடுபட்டதாக சாமிநாதன் (எ) ராஜராஜசாமி, கோகுல கண்ணன் மற்றும் ராசுக்குட்டி ஆகிய 3 பேரை இன்று காலை கைது செய்தனர்.

கல்விக்கான உதவிகள் வழங்குவதை கடந்தும்

மகிழ்ச்சியை வழங்குவதே அன்புக் கரங்கள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் டிவிட்

சென்னை, அக்.6– கல்விக்கான உதவிகள் வழங்குவதை கடந்தும் மகிழ்ச்சியை வழங்குவதே அன்புக் கரங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

கல்விக்கான உதவிகளை வழங்குவதைக் கடந்தும், உறவாய் அரவணைத்து மகிழ்ச்சியை வழங்குவதே அன்புக்கரங்கள். இத்தகைய மகிழ்ச்சியை மற்ற குழந்தைகளுக்கும் திமுகவினர் வழங்கிட வேண்டும். “சின்ன சின்ன அன்பில்தானே ஜீவன் இன்னும் இருக்கு!”.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

தமிழகம் முழுவதும் 4,390 பட்டாசு கடைகளுக்கு அனுமதி

தீயணைப்புத்துறை தகவல்

சென்னை, அக்.6– தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 4,390 பட்டாசு கடைகளுக்கு அனுமதி வழங்கியதாக தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

தீபாவளி பண்டிகை வரும் 20ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக மாநிலம் முழுவதும் பட்டாசு கடைகள் அமைக்க தீயணைப்பு மற்றும் போலீசாரிடம் முன் அனுமதி பெற வேண்டும். அந்த வகையில் தீயணைப்பு துறைக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து 6,500 கடைகளுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பங்கள் வந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி, தீயணைப்பு துறையினர் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று வெடி குண்டு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஆய்வு செய்து அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த சனிக்கிழமை வரை தமிழகம் முழுவதும் மொத்தம் 4,390 கடைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பட்டாசு கடைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் வந்து கொண்டு இருக்கிறது. இதனால், பட்டாசு கடைகள் அமைக்கும் பகுதியில் போலீசார் மற்றும் தீயணைப்பு அதிகாரிகள் நேரில் சென்று, கட்டப்பாடுகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்று ஆய்வு செய்து வருகின்றனர். இதனால் அனுமதிக்கான கடைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் காரில் கஞ்சா கடத்திவந்த

பாஜகவின் சிறுபான்மையின நல அணி தேசியசெயலாளர் இப்ராகிம் மகன் கைது

கஞ்சா, கார், செல்போன் பறிமுதல்

அண்ணாநகர், அக்.6– காரில் கஞ்சா கடத்திய வழக்கில் பாஜக சிறுபான்மையினர் அணியின் தேசிய செயலாளர் வேலூர் இப்ராகிம் மகன் உள்பட 2 பேரை போலீசார் கைது செய்து கார், செல்போன்களை பறிமுதல் செய்தனர். விசாரணைக்கு பிறகு அவர்களை சிறையில் அடைக்க உள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு நேரங்களில் போதை பொருட்கள் அதிகளவில் கடத்தப்பட்டு வருவதாக போலீசாருக்கு தொடர்ந்து தகவல்கள் வந்தன. இதையடுத்து போலீசார் இரவு நேரத்தில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், திருமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்றிரவு போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது வந்த ஒரு கார், போலீசாரை கண்டதும் நிற்காமல் வேகமாக சென்றுள்ளது. இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் விரட்டி சென்று அந்த காரை சுற்றிவளைத்து பிடித்தனர். பின்னர் அந்த காரில் இருந்த 2 பேரிடம் விசாரணை நடத்திய போது அவர்கள் போலீசார் பிடியில் இருந்து தப்பிக்க முயன்றனர். இதையடுத்து 2 பேரையும் போலீசார் பிடித்து திருமங்கலம் காவல்நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தனர்.

இதில், செங்குன்றம் பகுதியை சேர்ந்த அப்துல் ரஹீம்(22), நண்பர் ரஷீத் (23)என்பது தெரியவந்தது. இதில், அப்துல் ரகீமின் தந்தை வேலூர் இப்ராகிம் என்பதும்



அப்துல் ரஹீம் ரஷீத்

இவர் பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மையினர் அணியின் தேசிய செயலாளராக இருப்பதும் தெரியவந்தது. அவர்கள் வந்த காரை சோதனை செய்தபோது கஞ்சா பொட்டலங்கள் இருந்தன. தெரிந்த நபர்களுக்கு விற்பனை செய்ய கஞ்சா பொட்டலங்கள் எடுத்து சென்றார்களா? கஞ்சா பழக்கம் உடையவர்களா? என்றும் போலீசார் விசாரிக்கின்றனர். இவர்களிடம் இருந்து 15 கிராம் கஞ்சா பொட்டலம், கார், 2 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.

கஞ்சா கடத்தல் வழக்கில் பாஜக பிரமுகர் வேலூர் இப்ராகிமின் மகன் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கஞ்சா கடத்தல் வழக்கில் வேறு யாருக்காவது தொடர்பு உள்ளதா என்று போலீசார் தொடர்ந்து விசாரிக்கின்றனர். இதனிடையே வேலூர் இப்ராகிம் மகன் உள்பட 2 பேரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க உள்ளதாக தெரிகிறது.

மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்ட

பாமக நிறுவனர் ராமதாசுக்கு ஆஞ்சியோ சிகிச்சை

மருத்துவமனைக்கு ராமதாசை பார்க்க வந்த அன்புமணி பேட்டி

சென்னை, அக்.6– மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்ட பாமக நிறுவனர் ராமதாசுக்கு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டது. ஐசியூவில் இருப்பதால் ராமதாசை சந்திக்க முடியவில்லை என்றும், அவரது உடல் நிலை சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் மருத்துவமனைக்கு ராமதாசை பார்க்க வந்த அன்புமணி கூறினார்.

பாமக நிறுவனராக இருக்கக்கூடிய ராமதாஸ் மற்றும் அதன் கட்சியில் தலைவராக இருக்கக்கூடிய அன்புமணி ராமதாஸ் ஆகிய இருவருக்கிடையே, மோதல் போக்கு அதிகரித்து வருகிறது. தந்தை மகன் இடையே ஏற்பட்ட கருத்து மோதலை தொடர்ந்து, பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் சமீப காலமாக மாநாடு, பொதுக்கூட்டம் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை உள்ளிட்ட கட்சி தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார்.

இந்த நிலையில், ராமதாசுக்கு நேற்றிரவு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அவர் சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் ராமதாசுக்கு இதயம் தொடர்பாக முதற்கட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, இன்று காலை ராமதாசுக்கு ஆஞ்சியோ பரிசோதனை செய்யப்பட்டது. டாக்டர் செங்குட்டுவேல் தலைமையிலான குழுவினர் இந்த பரிசோதனையை மேற்கொண்டனர். இருப்பினும் ராமதாசை மருத்துவ குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். அவரது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ராமதாசுக்கு ஏற்கனவே, கடந்த 2013ம் ஆண்டு இதே மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவமனைக்குச் சென்று இதய பரிசோதனை சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறார். ராமதாஸ்- அன்புமணி இடையே மோதல் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், ராமதாஸ் அன்புமணியை தொடர்ந்து பல விதமாக விமர்சனம் செய்து வந்தாலும், அன்புமணி ராமதாஸ் மேடைகளில் "டாக்டர் ராமதாஸ் தான் நம்முடைய குலசாமி" அவரது கனவை நினைவாக்க நாம் பாடுபடுவோம் என்றே தொடர்ந்து பேசி வந்தார்.

இந்நிலையில், தனது தந்தை ராமதாஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது அறிந்த அன்புமணி, உடனடியாக இன்று காலை ராமதாசை சந்திப்பதற்கு அப்போலோ மருத்துவமனைக்கு விரைந்து வந்தார். அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களை சந்தித்து அன்புமணி கேட்டறிந்தார்.

இந்நிலையில் வெளியில் வந்த அன்புமணி ராமதாஸ் நிருபர்களிடம் கூறியதாவது:

நேற்று மாலை டாக்டர் ராமதாஸ் சென்னை அப்பல்லோ மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார். இன்று காலை ஆஞ்சியோ பரிசோதனை செய்யப்பட்டது. அதில் இருதயத்திற்கு செல்லக்கூடிய ரத்த குழாய்கள் நன்றாக இருக்கிறது. பயப்படுவதற்கு எதுவும் இல்லை. ராமதாசுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இரு நாட்கள் மருத்துவமனையில் ஓய்வு எடுக்க வேண்டும். தொடர்ந்து கொடுக்கின்ற மாத்திரைகளை எடுக்க வேண்டும். மற்றபடி பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை, அவரது உடல் நிலை சீராக உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஐசியூவில் உள்ளதால் அவரை பார்க்க முடியவில்லை. இன்னும் 6 மணி நேரம் ஐசியூவில் இருப்பார். மருத்துவர்களிடன் நான் பேசினேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

காம்பியா, உஸ்பெகிஸ்தான், கேமரூனை தொடர்ந்து

இந்திய தயாரிப்பு இருமல் மருந்து குடித்து இதுவரை 18 குழந்தைகள் பலி

தமிழ்நாடு, கேரளா உட்பட 4 மாநிலங்களில் தடை

புதுடெல்லி, அக். 6– இந்தியாவில் தயாரிக்கப்படும் தரமற்ற மருந்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்கதையாகி வருகின்றன. கடந்த 2022ம் ஆண்டு, இந்திய நிறுவனம் தயாரித்த இருமல் மருந்தால் மேற்கு ஆப்பிரிக்க நாடான காம்பியாவில் 70க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர். அதேபோல், 2023ம் ஆண்டு உஸ்பெகிஸ்தான் மற்றும் கேமரூன் ஆகிய நாடுகளில் இந்திய மருந்துகளால் குழந்தைகள் இறந்ததாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்தது. இந்தியாவில் கடந்த 2020ம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீரில் விஷ மருந்துக்கு 12 குழந்தைகள் பலியாகினர். மருந்துத்துறையில் நிலவும் அலட்சியம் மற்றும் பலவீனமான ஒழுங்குமுறை அமலாக்கமே இதுபோன்ற தொடர் துயரங்களுக்குக் காரணம் என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த நிலையில், மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ‘ஸ்ரேசன் பார்மாசூட்டிகல்ஸ்’ என்ற நிறுவனம் தயாரித்த ‘கோல்ட்ரிஃப்’ என்ற இருமல் மருந்தைக் குடித்த 5 வயதுக்குட்பட்ட 18 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் சிறுநீரக செயலிழப்பு, வாந்தி, உடல் வீக்கம் போன்ற கடுமையான பாதிப்புகளுடன் மருத்துவமனைகளில் உயிருக்குப் போராடி வருகின்றனர். தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டுத் துறை நடத்திய ஆய்வில், அந்த இருமல் மருந்தில் ‘டைஎத்திலீன் கிளைக்கால்’ என்ற விஷத்தன்மை வாய்ந்த வேதிப்பொருள் 48% வரை கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து, மருந்து தயாரிப்பு நிறுவனம் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த மருந்தை தனது தனியார் மருத்துவமனையில் பரிந்துரைத்ததாகக் கூறப்படும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த அரசு மருத்துவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் இந்த மருந்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. இது குறித்து உயிரிழந்த குழந்தையின் தாய் ஒருவர் கூறுகையில், ‘எங்களுக்குப் பணம் வேண்டாம். மருந்து என்று நினைத்து விஷத்தைக் குடித்த ஒவ்வொரு குழந்தைக்கும் நீதி வேண்டும்’ எனக் கண்ணீருடன் கூறியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக, ஒன்றிய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு நாடு தழுவிய அளவில் சோதனைகளைத் தொடங்கியுள்ளது.

தங்கம் விலை ஜெட் வேகம்

ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்தை தாண்டி வரலாற்று உச்சம்

வெள்ளி விலையும் போட்டி போட்டு அதிகரிப்பு

சென்னை, அக்.6– தங்கம் விலை இன்று காலையில் ஜெட் வேகத்தில் அதிகரித்து ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்தை தாண்டி புதிய வரலாற்று உச்சம் கண்டது. வெள்ளி விலையும் போட்டி போட்டு உயர்ந்து வருகிறது.



தங்கம் விலை கடந்த கடந்த செப்டம்பர் மாதம் முதல் வரலாறு காணாத வகையில் உயர்ந்து வருகிறது. இதே போல வெள்ளி விலையும் போட்டி போட்டு உயர்ந்து வந்தது. இந்த விலை உயர்வு என்பது இந்த மாதமும் தொடர்கிறது. அதே நேரத்தில் தங்கம், வெள்ளி விலை காலை, மாலை என உயர்ந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. இதற்கிடையில் கடந்த 4ம் தேதி தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10,950க்கும், பவுனுக்கு ரூ.400 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.87,600க்கும் விற்பனையானது. இதே போல அன்றைய தினம் வெள்ளி விலையும் அதிகரித்தது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3 அதிகரித்து ஒரு கிராம் ரூ.165க்கும், கிலோவுக்கு 3 ஆயிரம் ரூபாய் உயர்ந்து பார் வெள்ளி ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தங்கம் மார்க்கெட்டுக்கு விடுமுறையாகும். அதனால் தங்கம், வெள்ளி விலையில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில் வார தொடக்க நாளான இன்றும் தங்கம் விலை அதிரடியாக உயர்வை தான் சந்தித்தது. இன்று காலையில் தங்கம் விலை கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.11,060க்கும், பவுனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு பவுன் ரூ.88,480க்கும் விற்கப்பட்டது. இது தங்கம் விலை வரலாற்றில் அதிகபட்ச விலை என்ற புதிய உச்சம் கண்டது. தங்கத்தை போல வெள்ளி வெள்ளி விலையும் இன்று உயர்ந்தது. இன்று காலை வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.166க்கும், கிலோவுக்கு ஆயிரம் உயர்ந்து, பார் வெள்ளி ரூ.1 லட்சத்து 66 ஆயிரத்துக்கும் விற்பனையானது. தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நேரத்தில் தங்கம், வெள்ளி விலை போட்டி போட்டு உயர்ந்து வருவது நகை வாங்குவோருக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
